செய்தி வெளியீடு
பெருநகர சென்னை மாநகராட்சி

செ.வெ.எண். 25 நாள் : 01.02.2019

**மெரினா கடற்கரை மற்றும் லூப் சாலையில் உள்ள கடைகளை ஒழுங்குப்படுத்துதல் தொடர்பான கருத்து கேட்புக் கூட்டம்பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் மற்றும் சென்னை பெருநகர காவல்துறை ஆணையாளர் திரு.ஏ.கே.விஸ்வநாதன், இ.கா.ப., அவர்கள் தலைமையில் இன்று நடைபெற்றது.**

உலகின் இரண்டாவது பெரிய கடற்கரையான சென்னை மெரினா கடற்கரைக்கு தினந்தோறும் பல்லாயிரக்கணக்கான பொதுமக்களும், வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளும் வந்து செல்கின்றனர். மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற உத்தரவின்படி சென்னை மெரினா கடற்கரையில் உள்ள சிறு கடைகள் மற்றும் லூப் சாலையில் உள்ள மீன்கடைகள் முறைப்படுத்தப்பட்டு ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை அமைச்சர் அவர்களும் மெரினா கடற்கரையை தூய்மையாக பராமரிக்க மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற உத்தரவின்படியும், அதேநேரத்தில் அங்குள்ள மீனவர்கள் மற்றும் சிறுகடை வியாபாரிகளின் வாழ்வாதாரம் பாதிக்காத வகையிலும் பணிகளை மேற்கொள்ள பெருநகர சென்னை மாநகராட்சி அதிகாரிகளுக்கு அறிவுரைகள் வழங்கினார்கள்.

அதனைத் தொடர்ந்து, மெரினா கடற்கரை மற்றும் லூப் சாலையில் உள்ள சிறு கடைகள் மற்றும் மீன் கடைகளை ஒழுங்குப்படுத்துதல் மற்றும் தூய்மையாக பராமரித்தல் தொடர்பாக பல்வேறு மீனவர் சங்கங்களின் பிரதிநிதிகள், மெரினா கடற்கரையிலுள்ள வியாபாரிகள் சங்கப் பிரதிநிதிகளுடனான கருத்து கேட்புக்கூட்டம் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் மற்றும் சென்னை பெருநகர காவல்துறை ஆணையாளர் திரு.ஏ.கே.விஸ்வநாதன், இ.கா.ப., அவர்கள் தலைமையில் இன்று (01.02.2019) ரிப்பன் மாளிகையில் உள்ள அம்மா மாளிகை கூட்டரங்கில் நடைபெற்றது.

மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற உத்தரவின்படி, மெரினா கடற்கரையில் ஆங்காங்கே இருந்த சிறு கடைகள் ஒழுங்குப்படுத்தப்பட்டு வியாபாரிகளின் வாழ்வாதாரம் பாதிக்காத வகையில் உழைப்பாளர் சிலை முதல் மெரினா நீச்சல் குளம் வரை 4 வரிசைகளாகவும், உழைப்பாளர் சிலைக்கு குறுக்குவாட்டில் 2 வரிசைகளாகவும், மெரினா நீச்சல் குளம் முதல் காந்தி சிலை வரை 9 வரிசைகளாகவும், காந்தி சிலை முதல் கலங்கரை விளக்கம் வரை 3 வரிசைகளாகவும், காந்தி சிலை அருகில் குறுக்குவாட்டில் 1 வரிசையும் என சிறுகடைகள் முறைப்படுத்தப்பட்டுள்ளன. இதேபோன்று லூப் சாலையில் உள்ள சிறு மீன் கடைகளும் ஒழுங்குப்படுத்தப்பட்டுள்ளன.

இன்று நடைபெற்ற வியாபாரிகள் மற்றும் மீனவப் பிரதிநிதிகளின் கருத்து கேட்புக் கூட்டத்தில், மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற வழிகாட்டுதலின்படியும், சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) சட்டம் 2014

Scanned by CamScanner

அடிப்படையிலும் உருவாக்கப்படவுள்ள கடற்கரை வியாபாரக் கடைகளுக்கான துணை விதிகள் குறித்தும், தடைசெய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்களை பயன்படுத்துவதை தவிர்த்தல், வியாபாரக் கடைகளுக்கு இடையேயான நடைபாதையை தூய்மையாக பராமரிக்க சுத்தம் செய்யும் இயந்திரங்கள் எளிதாக செல்லும் வகையில் இடைவெளியை பராமரித்தல், லூப் சாலையில் உள்ள மீன் அங்காடிகளை புதியதாக அமைக்கப்படவுள்ள நவீன வசதிகளுடன் கூடிய மீன்அங்காடிக்கும், சென்னை நதிகள் சீரமைப்பு கழக கட்டடத்திற்கும் இடமாற்றம் செய்தல் மற்றும் கடற்கரையில் குறைந்தது 50 காவலர்களை பாதுகாப்பு பணியில் அமர்த்துதல் போன்றவை குறித்தும் இக்கூட்டத்தில் விரிவாக விவாதிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் மீனவர் சங்கங்களின் பிரதிநிதிகள் மற்றும் மெரினா கடற்கரையிலுள்ள வியாபார சங்கங்களின் பிரதிநிதிகளின் கருத்துக்கள் கேட்டறியப்பட்டு, அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும். மெரினா கடற்கரையை தூய்மையாக பராமரிக்க தமிழ்நாடு அரசு மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு வியாபாரிகள் மற்றும் மீனவர்கள் தங்களது முழு ஒத்துழைப்பை அளிக்க வேண்டும் என ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் துணை ஆணையாளர் (வ (ம) நி) திருமதி ஆர்.லலிதா, இ.ஆ.ப, துணை ஆணையாளர் (பணிகள்) திரு.எம்.கோவிந்த ராவ், இ.ஆ.ப., துணை ஆணையாளர் (சுகாதாரம்) திரு.பி.மதுசுதன் ரெட்டி, இ.ஆ.ப., கூடுதல் மாநகர காவல் ஆணையாளர் திரு.மகேஷ் அகர்வால், இ.கா.ப., காவல் இணை ஆணையாளர் திரு.பாலகிருஷ்ணன், இ.கா.ப., பெருநகர சென்னை மாநகராட்சி வட்டார துணை ஆணையாளர் டாக்டர் சுபோத்குமார், இ.ஆ.ப., முதன்மை தலைமைப் பொறியாளர் திரு.எம்.புகழேந்தி, தலைமைப் பொறியாளர் (கட்டடம்) திரு.என்.மகேசன், தொடர்புடைய இதர அரசுத்துறைகளான மீன்வளத்துறை, தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்றுவாரியம், கடற்கரை ஒழுங்குப்படுத்துதல் ஆணையம், பொதுப்பணித்துறை, காவல்துறை, பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் உணவு பாதுகாப்புத்துறையைச் சார்ந்த உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**

Scanned by CamScanner